ஊடக அறிவிப்பு

2008-09-23

Visit our web site
www.tisrilanka.org

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
Building a Nation of integrity

28/1, Bullers Lane, Colombo 07
Tel/Fax: 0112-501474, 0112-592287
Email: tisl@sltnet.lk
Web: http://www.tisrilanka.org

## ஊழல் சுட்டியில் 92 வது இடத்தைப் பெற்றுள்ள இலங்கை…..

ஊழலுக்கு எதிராக போராடும் உலகளாவிய குடியியில் சமூக நிறுவனங்களில் முன்னணி நிறுவனம் ஒன்றான டிறான்ஸ்பறனஸ்சி இன்டர்நெஷனல் 2008 ல் வெளியிட்ட ஊழல் அவதானிப்பு சுட்டியில், (Corruption perception index) வரிசைப்படுத்தப்பட்ட 180 நாடுகளில் இலங்கை 92 வது இடத்தை வகிக்கிறது.

இலங்கை எடுத்துள்ள 3.2 புள்ளி, அரசாங்க பொதுத்துறையில் காணப்படும் ஊழலை பாரியதொரு பிரச்சினையாக சுட்டிக்காட்டுகிறது. அண்டைய நாடுகளில் பூட்டானை தவிர்த்து அனைத்து நாடுகளும் 3.5 ற்கு குறைவாக எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் பொது நிதி தொடர்பான விடயங்களில் வெளிப்படைத்தன்மை இல்லாமையும் இது தொடர்பில் பாராளுமன்றத்தின் போதிய மேற்பார்வை இல்லாமையுமே இப்பிரச்சினைக்கு பிரதான காரணங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இப்பிராந்தியத்தில் இந்தியாவும் (3.4) இலங்கையும் மட்டுமே 3 ற்கு மேற்பட்ட சுட்டியை காட்டியும் மாலைதீவு (2.8), நேபாளம் (2.7),பாகிஸ்தான் (2.5) மற்றும் பங்களாதேஷ் (2.1) என்பன குறைவான சுட்டியையே கொண்டுள்ளன. இந்தியாவின் இந்த நிலைக்கு தகவல் பெறும் உரிமைக்கான சட்டத்தின் நடைமுறைப்படுத்தலே காரணம் என்று ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

டிறான்ஸ்பறன்ஸ்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவின் நிறைவேற்று பணிப்பாளர் J.C. வெலியமுன ஊழல் அவதானிப்பு சுட்டியின் தனிச்சிறப்பு பற்றி விளக்குகையில் “இச்சுட்டியானது நாடுகளின் பொதுத்துறை அலுவலர்களுக்கிடையேயும் அரசியல் வாதிகளுக்கிடையேயும் நிலவும் ஊழலின் அளவைப் பொறுத்து நாடுகளை வரிசைப்படுத்தும்” என்று குறிப்பிட்டார். ஒவ்வொரு நாட்டினதும் ஊழலின் அளவானது 1-10 ற்கு இடைப்பட்ட ஆயிடைப்பபெறுமதியின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது. அதில் 0 ஆனது ஊழல் அதிகம் இடம் பெறும் நிலைமையையும் 10 ஆனது ஊழல் இல்லாத தூய்மையான நிலையையும் குறிக்கிறது.

ஊழல் அவதானிப்பு சுட்டியானது பொதுத்துறையிலுள்ள ஊழல் பற்றி கவனம் செலுத்துவதுடன் தனிப்பட்ட நலனனுக்காக பொதுத் துறையை துஷ்பிரயோகம் செய்தல் என்பதாகவே ஊழலை வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. இந்த சுட்டியை தொகுப்பதில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தனிப்பட்ட நலன்களுக்காக பொதுத்துறை அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்தல் என்பது பற்றியும் கேள்விகள் எழுப்பப்பட்டன. இது பொது ஊழியர்களின் லஞ்சம், பொதுச்சேவை நடைமுறைகளில் தன் நலனை முதன்மைப்படுத்தல், பொது நிதிகளில் கையாடல்கள் என்பவற்றையும் உள்ளடக்கும்.ஊழல் எதிர்ப்பிற்கான கொள்கைகளை உறுதிப்படுத்தும் ஆய்வுக்கேள்விகளும் உள்ளடக்கப்பட்டன. ஊழல் அவதானிப்பு சுட்டி 2008, 13 வித்தியாசமான வாக்கெடுப்புகளையும், 11 சுதந்திர நிறுவனங்களால் செய்யப்பட்ட ஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டது. TI, பயன்படுத்தப்பட்ட தரவுகளுக்கான ஆய்வு முறைகள் மிகவும் தரம் வாய்ந்தவை என்பதையும் ஆய்வு நடவடிக்கைகள் முழுமையான நேர்மைத்திறனோடும் செய்யப்பட்டது என்பதையும் தெளிவாக உறுதி செய்கிறது.

2008 சுட்டியின் படி பார்க்கையில் ஒரு நாடு செல்வம் நிறைந்ததோ வறுமை நிறைந்ததோ அல்லது மேற்கிலோ அல்லது கிழக்கிலோ இருப்பினும் ஊழல் எங்கும் நிறைந்திருப்பது தெளிவாகிறது.இது தனியாகவும் மிகுந்த அர்ப்பணிப்புடனும் கையாளப்பட வேண்டியதொரு விடயமாகும்.வறிய நாடுகளுக்கிடையே பார்படோஸ் (7.0), சிலி (6.9),சுலோவேனியா (6.7) மற்றும் எஸ்டோனியா(6.6) என்பன அதிகளவு சுட்டியை காட்டுகின்றன. இந்நாடுகள் தமக்குள் ஊழலை குறைப்பதற்கு மிகத்தீவிரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதை எடுத்துக்காட்டுகிறது.

சுட்டியின் இறுதிப்பகுதியில் காணப்படும் நாடுகளாக சோமாலியா (1.0),மியன்மார் (1.3), ஈராக் (1.3), ஹெய்டி (1.4),ஆப்கானிஸ்தான் (1.5) மற்றும் சூடான் என்பன உள்ளன. இது உள்நாட்டு ,வெளிநாட்டு முரண்பாடுகளாலும் அங்கு நிலவும் சர்வாதிகாரப் போக்கினாலுமேயே எனக்கருதப்படுகிறது. ஆகவே இலங்கையில் தொடர்ந்திருக்கும் உள்நாட்டு பிரச்சினைகளில் இவை பாடமாக கொள்ளத்தக்கன என்பது குறிப்பிடத்தக்கது. 2008 சுட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றதாக நியூசிலாந்து,டென்மாரக் மற்றும் சுவீடன் (9.3) என்பன திகழ்கின்றன. சிங்கப்பூர் (9.2), பின்லாந்து (9.0),ஐஸ்லாந்து (8.9) என்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பேர்லினில் வெளியிடப்பட்ட ஊடக அறிவிப்பு ஒன்றில் கருத்து வெளியிட்ட டிறான்ஸ்பறனஸ்சி இன்டர்நெஷனலின் தவிசாளர் ஹியுகெட் லாபெல் ஊழலை எதிர்க்க பாராளுமன்றம், சட்ட அமுலாக்கம், சுதந்திர ஊடகம், மற்றும் விழிப்புணர்வான குடியியல் சமூகத்தின் மூலமான வலுவான மேற்பார்வை அவசியமாகிறது என்றார். இத்தகைய மட்டங்களில் பலவீனங்கள் காணப்படும் போது ஊழல் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பரவும் என்பதோடு பாரிய விளைவுகளை சாதாரண மக்களிலும், நீதியிலும், சமூகங்களுக்கிடையிலான சமத்துவத்திலும் பாரியளவில் ஏற்படுத்தும் என்று வலியுறுத்தினார்.